நெருக்கடி காரணமாக மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதில் மிகுந்த இடையூறுகள் ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, வடக்கு அலைத் தடுப்புச் சுவரில் 300 மீட்டர் நீளத்தில் புதிய படகு அணையும் துறை அமைத்தல், கண்ணாடி நாரிழை படகுகள் நிறுத்துவதற்கு ஏற்றவகையில் 200 மீட்டர் நீளத்திற்கு புதிய படகுத் துறை அமைத்தல், தற்போதைய படகுத் துறையினை வடக்கு மற்றும் தெற்கு முனைகளில் தலா 50 மீட்டர் நீளத்திற்கு நீட்டிப்பு செய்தல், 150 மீட்டர் நீளத்திற்கு இரண்டு புதிய துணை படகுத் துறைகளும், 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு புதிய துணை படகுத் துறையும் அமைத்தல், படகினை பழுது பார்க்க வசதியாக சாய்வு தளம் அமைத்தல், இரண்டு புதிய வலை பழுது பார்க்கும் கூடங்கள் கட்டுதல், சூரிய சக்தி மூலமாக இயங்கும் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மீனவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும், மீனவர்களின் வருவாயைப் பெருக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கடல் மீனவர்களுக்கு நவீன ரேடியோ கருவிகள் வழங்குதல், சேத்துப்பட்டு ஏரி, சென்னையில் மீன்பிடித் துறைமுகங்களைப் புனரமைத்தல்— முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசின் பொற்காலத்தில், மகுடத்தில் தினம் ஒரு மாணிக்கமாய் 110 விதியின்கீழ் துறைகளெல்லாம் செழித்து வளர, துறை சார்ந்திருக்கிற மக்களெல்லாம் இன்புற்று மகிழ்வோடு மகிழ்ந்து வாழ பல்வேறு

துறைகளுக்கும், பல்வேறு அறிவிப்புகளை கோடிக்கணக்கிலே தந்திட்ட முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "கடல் மேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்க வைத்தான்" என்கின்ற அந்தப் பாடல் வரியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்காலத்தில் அந்தப் பாடல் வரியையே பொய்யாக்குகின்ற வகையில் கடல் மேல் என் மீனவன், தாய்த் தமிழ் மீனவன் பிறந்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி) இனி என்னுடைய பொற்கால ஆட்சியில் அவன் கண்ணீரில் மிதக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நினைவுகூருகின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே, தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் VHF என்கின்ற ரேடியோ கருவியை வழங்கவிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்கள் மீன்பிடித் தடைக் காலங்களிலே 2 ஆயிரம் ரூபாயாக இருந்த உதவித் தொகையை 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார்கள்.

சென்ற ஆட்சிக் காலத்திலே காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மீனவர்களுடைய உயிருக்கு உத்தரவாதம் இல்லை. கொத்துக்கொத்தாய் செத்த பின்பும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை தொடர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) வலை அறுக்கப்பட்டபோது, மீன்கள் சூறையாடப்பட்டபோது (குறுக்கீடுகள்) அப்படிப்பட்ட அந்தச் சூழ்நிலைகளிலெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் அந்த மீனவர்களைப் பாதுகாத்தது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உறுப்பினர் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

திரு. உ. தனியரசு: மீனவர்களைப் பாதுகாத்த ஓர் ஒப்பற்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மீனவர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களை புயல், வெள்ளம் போன்ற அபாயங்களிலிருந்து காப்பதற்கும், மீட்பதற்கும் இந்தக் கருவியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். மீனவர்கள் இலங்கை கடற்படையால் அல்லது அந்நிய தேசத்திலிருந்து அந்நியர்களால் எப்படிப்பட்ட தாக்குதலுக்கும் ஆளாக்கப்படக் கூடும் என்றும், மீனவர்களுடைய உயிரும், உடைமையும் பாதுகாப்பாக இருக்கிறதா, அவர்கள் தங்கள்

2013 ஏப்ரல் 5] [திரு. உ. தனியரசு]

குடும்பத்தோடும், நம்முடைய தமிழ்நாடு அரசோடும் தொடர்புகொள்வதற்கு, பாதுகாப்பாக இருப்பதற்கு தகுதி வாய்ந்த, சக்தி வாய்ந்த கருவியை மிகக் குறைந்த விலையில், மானிய விலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற திட்டம் இதற்கு முன்பு இருந்திருக்கிறதா? அப்படி, துறைதோறும், துறை சார்ந்திருக்கிற மக்களுக்குப் பார்த்துப் பார்த்து உதவி செய்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், வாக்களிக்கிற மனிதனுக்கு மட்டும் அவர்கள் நன்மை செய்யவில்லை. தெருவிலே வாழக்கூடிய நாய்களுக்குக்கூட ரூ.22 கோடி நிதியை அள்ளித் தந்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நாய்களுக்கு வாக்குரிமை இல்லை, நாய்கள் ஆர்ப்பாட்டம் செய்யாது, நாய்கள் சாலை மறியல் செய்யாது, நாய்கள் உண்ணாவிரதம் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி, வாக்களிக்கத் தகுதியில்லாத உயிரினமாக இருக்கிற, ஆனாலும், மனிதனுக்கு நன்றியுள்ள ஒரே ஜீவன் நாய் என்பதனால், (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.22 கோடி நிதியைத் தந்து, வாய் இல்லாத, ஆனால் நன்றியுள்ள ஒரு பிராணியையும் காக்கின்றார் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தினம், தினம் கடலிலே உயிருக்கு உத்தரவாதம் இல்லாத தொழிலை மேற்கொண்டிருக்கிற மீனவ சமுதாயத்திற்கு தகுதி வாய்ந்த, சக்தி வாய்ந்த நவீன கருவிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்பிக்கையோடு மீனவர்களுக்கு தகவல் தொடர்பு, உள்கட்டமைப்பைத் தந்திருக்கிறார்கள். அந்தத் தகுதி வாய்ந்த கருவிகளை 75 விழுக்காடு மானியத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் ரூ.2,50,000 பெறுமானமுள்ள கருவியை வெறும் ரூ.60,000 மதிப்பில் பெற்றுக்கொள்வதற்கு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவ்வாறு, மாதக் கணக்கில் கடலிலே பயணம் செய்து வாழ்கின்ற மீனவர்கள் நிலையைக் குறித்து தங்கள் குடும்பத்தோடும், அரசோடும் தொடர்புகொள்வதற்கு கருவிகளை வழங்கியிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மீனவர்கள் பயன்படுத்துகிற படகுகள், மீன்பிடி இறங்கு துறைமுகங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

சேத்துப்பட்டு ஏரியைப் புனரமைக்க ரூ.42 கோடி நிதி தந்துள்ளார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதுபோல, காசிமேடு, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்தைச் சீர் செய்ய ஏற்கெனவே ரூ.16 கோடி நிதியினைத் தந்து அந்தப் பணி மிக வேகமாக வளர்ந்து வருகிற நிலையைப் பார்க்கிறோம். தற்போது 1,395 படகுகளைப் பயன்படுத்துகின்ற அந்தத் துறைமுகத்திற்கு, ரூ.75 கோடி தந்து படகுத் துறையை மேம்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கும், மீனவர்களுடைய உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், படகு, நவீன கருவிகள், படகுத் துறைமுகங்கள், மீனவர்களின் அனைத்து வகை மேம்பாட்டிற்காகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏனைய சமூகத் துறைகளுக்கு நிதி ஒதுக்கியதைப்போலவே, இன்னும் கூடுதலாகவே மீனவர்களுக்கு இன்று விதி 110-ன்கீழ் அறிவிப்பின்மூலமாக நல்ல பல திட்டங்களைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனமாரப் பாராட்டி, நன்றி தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் செய்யக்கூடிய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அன்றாடம் துன்பங்களை அனுபவிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. நேற்றுகூட இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கக்கூடிய ஒரு சூழலில் மீனவர்களுடைய நலனிலே இந்த அரசு மிகுந்த அக்கறையும், கருணையும் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலே இன்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழே மீனவர்களுடைய நலனுக்காக, பாதுகாப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களை மனித நேய மக்கள் கட்சி மனதார வரவேற்கின்றது.

குறிப்பாக இன்று 5,060 விசைப் படகுகளிலே, தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத படகுகளுக்கு V.H.F. கருவிகளை 75 சதவிகித மானியத்துடனும், நீண்டகாலமாக கடலிலே மீன் பிடிக்கக்கூடிய அதிவேக படகுகளுக்கு V.H.F. கருவிகளை ரூ.2,50,000

2013 ஏப்ரல் 5][முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பெறுமானமுள்ள அந்தக் கருவிகளை 75 சதவிகித மானியத்துடன் வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீனவ சமுதாயத்தின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த, உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது நிச்சயமாக மீனவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்வதற்கும், தாக்குதல் நடைபெறக்கூடிய நேரங்களிலே உடனடியாக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கும், அதேபோல Oceanographic Centre-லிருந்து எந்தப் பகுதியிலே அதிகமான மீன்கள்வரத்து இருக்கிறது என்பதை அறிந்து, தங்களுடைய மீன்பிடி வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும், மிகச் சிறப்பாக அமையும். நான் நினைக்கின்றேன், இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற ஒரு மானியம் வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல, சேத்துப்பட்டு ஏரியைப் புனரமைப்பதற்கு 45 கோடி ரூபாயும், சென்னையிலுள்ள காசிமேடு, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திலே படகுகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்திருக்கக்கூடிய சூழ்நிலையில், அதைச் சீரமைப்பதற்கு 75 கோடி ரூபாயும் அள்ளித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரவையிலே இன்று அளித்துள்ள புதிய அறிவிப்புகள் ஒன்றா, இரண்டா? இல்லை ஏராளமாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயம் செய்கின்ற தொழிலாளிக்காக பெரிய சாதனையான அறிவிப்புகள்; நெசவாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்குத் தேவையான பெரிய அறிவிப்புகள்; அது மட்டுமல்லாமல், இன்றையதினம் மீனவர்களுக்கு ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். மீன் பிடித் தடைக் காலத்திலே வழங்கக்கூடிய உதவித் தொகை ரூ.2,000

என்பதை ரூ.4,000 ஆக உயர்த்தி ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். அது மட்டுமல்லாமல், இன்றையதினம் மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது அவர்கள் எந்த இடத்தில் மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலை தரையிலே இருக்கின்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, பக்கத்திலே மீன் பிடிக்கின்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தகவல் தொடர்பு சாதனம் வாங்குவதற்காக ரூ.20,000 விலையில் 75 சதவீதம் மானியத்துடன் கொடுத்திருக்கிறார்கள். ஆழ்கடலிலே சென்று மீன் பிடிப்பவர்களுக்கு ரூ.2,50,000 மதிப்புள்ள கருவியை 75 சதவீதம் தள்ளுபடி செய்து அறிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், சென்னை சேத்துப்பட்டு ஏரியைச் சீரமைத்து, அங்கே பசுமைப் பூங்காவை அறிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தைச் சீரமைப்பதற்காக 75 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்காக பல நல்ல திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக மீண்டும் நன்றியை கூறிக்கொள்கிறேன். அம்மா, நீங்கள் தொட்டவை அனைத்தையும் நிச்சயமாக வெற்றி பெறாமல் விட்டது கிடையாது. அதேபோல அனைத்தும் நிறைவேறும் காலம் வெகு தொலைவில் இல்லையென்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட கடற்கரையைக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தில் வேலைவாய்ப்பினை அதிகரிப்பது, உருவாக்குவது, அன்னியச் செலாவணியைக் ஈட்டிக் கொடுப்பது, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய மீனவர் சமுதாயத்தில் ஒளி வீசக்கூடிய முறையிலே நவீன கருவிகளை வழங்குவது, அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய மீனவர் சமுதாயத்திற்குத் தொடர்ந்து இலங்கை கடற்படையினால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். இதனை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் பாராட்டுகிறோம்.

2013 ஏப்ரல் 5] [திரு. எம். ஆறுமுகம்]

5,600 மீன்பிடி விசைப் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாதவர்களுக்கு ரேடியோ கருவிகள் குறைந்த மானிய விலையிலே வழங்குவது என்பதும், கட்டுப்பாட்டு அறைகளோடு தொடர்பு கொள்வதற்கான முறையிலே நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதும், *75* கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடி இறங்கு தளங்களைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளும், இப்படி பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்திருப்பது மட்டுமல்ல, தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது இலங்கை கடற்படையினால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்ற நிலையில் மத்திய அரசாங்கம் பாராமுகமாக இருக்கக்கூடிய இந்த நேரத்தில், மீனவர்கள் உடனுக்குடன் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அறிவித்திருப்பது என்பதும், அந்தச் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இத்தகைய நல்ல அறிவிப்புகளை அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-35

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலின் நடுவே பயணம் போனால் குடிநீர் தருபவர் யாரோ, தனியாய் வந்தோர் துணிவைத் தவிர துணையாய் வருபவர் யாரோ' என்று மீனவர்களின் நிலையை உணர்ந்து அன்று பாடினார் புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்று ஆழ்கடலில் மீன் பிடிப்பவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் தந்து, ஒரு விசைப் படகிற்கு ரூபாய் *30* இலட்சம் மானிய நிதியுதவி தந்து, ரூபாய் *60* இலட்சம் செலவில் விசைப் படகு அமைப்பதற்கு மீனவர்களுக்கு வாழ்க்கை தந்த ஒரே முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்கள் பாதுகாப்புடன் தொழில் செய்ய அவர்கள் உயிருக்கும் உத்தரவாதம் அளிக்கும்வகையிலே, V.H.F. மற்றும் H.F. ரேடியோ கருவிகள் 75 சதவிகித மானியத்தில் தந்து, மீன் பிடிப்பை அதிகரித்து, பொருளாதாரம் உயர வழிவகை செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சென்னை மீன்பிடித் துறைமுகம் உலகத் தரத்திற்கு ஏற்ப அனைத்து வசதிகளும் பெறத்தக்க வகையிலே சுத்தமான, சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுவதன்மூலம் அவர்கள் பிடித்து வருகின்ற மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலே ரூ.75 கோடி மதிப்பீட்டில் நிதியுதவி அளித்து, சென்னை மீன்பிடித் துறைமுகம் மேம்பாடு அடையச் செய்தமைக்கும், சென்னை, கீழ்ப்பாக்கம், சேத்துப்பட்டில் அமைந்துள்ள ஓசான் குளத்தில் மக்கள் பொழுதுபோக்கிற்கு உகந்த இடமாக மாற்றி, நோயற்ற வாழ்வு தருகிற வகையில், எழில்மிகு பசுமைப் பூங்கா உருவாக்கி, அந்தக் குளத்தில் மக்களுக்குத் தூண்டில் மூலமாக மீனைப் பிடித்து, சுடச்சுடவும், சுவையாகவும் உணவு அருந்த குளத்தின் நடுவே உணவகம் அமைப்பதற்கு ரூ.42 கோடி நிதியைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் விருப்பத்திற்கேற்ப என்ன செய்யவேண்டும் என்பதை உணர்ந்து திட்டங்களைத் தந்து, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற உயர்ந்த கோட்பாட்டோடு (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் போற்றுகின்ற நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீன் வளத் துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவுடன் வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீன் வளம் என்பது பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பெருவாரியான மக்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. ஆனால், மீனவ மக்களின் வாழ்வு என்பது 'கடல்மேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டான்' என புரட்சித் தலைவர் வேதனையுடன் பாடியதைப்போல அமைந்தது. "உங்கள் வாழ்வு கடல் நீரை அள்ள அள்ள குறையாததுபோல, எப்போதும் வளமாகத் தொடரும், நான் துணை நிற்கிறேன்" என்று அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித் தொகை இரண்டு*

மடங்காக உயர்வு, மீன்பிடி குறைந்த காலத்தில் ரூ.4,000 நிவாரணத் தொகை, மீன்வள அறிவியல் பல்கலைக்கழகம் இப்படி மீனவர்கள் வாழ்வு மேம்பட திட்டங்களை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், இன்றைக்கு மேலும் அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்.

சென்னை மீன்பிடித் துறைமுக மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு, சென்னையில் தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் சேத்துப்பட்டு குளத்தில் பசுமைப் பூங்கா என சிறப்பான அறிவிப்புகளை அம்மா அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். அம்மா நீங்கள் மீனவ மக்களை, கரை மேல் சிரிக்க வைத்தீர்கள், அவர்களின் கண்ணீரைத் துடைத்திட்டீர்கள் என நன்றியுடன் கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

பள்ளித் தேர்வில் வினாத்தாள் குறைபாடு, தேர்வுக்குமுன் வினாத்தாள் வெளியானது மற்றும் விடைத்தாள்கள் காணாமல் போனது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, க. பாலகிருஷ்ணன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, கே. கோபிநாத், ஜே.ஜி. பிரின்ஸ், என்.ஆர். ரெங்கராஜன், திருமதி எஸ். விஜயதரணி, எஸ். ஜாண் ஜேக்கப், அ. கணேஷ்குமார், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, அ. அஸ்லம் பாஷா, எம். ஆறுமுகம், பி.எல். சுந்தரம், கே. உலகநாதன், வெ. பொன்னுப்பாண்டி, சு. குணசேகரன், தங்கம் தென்னரசு, அர. சக்கரபாணி, க. அன்பழகன், அ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*